# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN AUGUST – 2009

## BBA 36 – PROJECT MANAGEMENT

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) கீழ்வருவனவற்றை உள்ளடக்கி ஒரு ஞாபகக் குறிப்பு ஒன்றினைச் செயற்றிட்ட உருவாக்கச் செய்முறை தொடர்பினால் உமது சிரேஷ்ட செயற்றிட்ட முகாமையாளருக்கு எழுதுக.

- செயற்றிட்ட அடையாளங்காணல் (01 புள்ளி)
- செயற்றிட்ட சாத்தியக் கற்கைகள் (01 புள்ளி)
- செயற்றிட்ட சாத்தியக் கற்கைகளுக்கான சோதனைப் பட்டியல் (06 புள்ளிகள்)
- செயற்றிட்ட மதிப்பீடு (01 புள்ளி)

ஆ) செயற்றிட்டம் ஒன்றைப் பெயரிடுக (01 புள்ளி)

இ) அப்படிப்பட்ட செயற்றிட்டத்தின் பண்புகளைப் பட்டியற்படுத்துக (05 புள்ளிகள்)

ஈ) செயற்றிட்ட மதிப்பீட்டு முறைகளைச் சுருக்கமாகக் கூறுக (05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) இரண்டு செயற்றிட்ட முகாமையாளர்களின் கூற்றுக்கள் கீழ்வருமாறு :

**கூற்று ஒன்று** : செயற்றிட்ட முகாமையாளர்-கிரயம். அவர் செயற்றிட்டம் வெற்றியடையும் என வாதிக்கின்றார்.

அவரது வாதத்திற்கு ஆதாரமாக கீழ்வரும் தகவல்களை அவர் கொடுகின்றார்.

| விபரம் | ரூபாய் தொகையில் |
|---|---|
| செயற்றிட்ட ஆரம்ப முதலீடு | 200,000 |
| காலம் | 05 (வருடங்கள்) |
| கழிவிடல் வீதம் | 10 % |
| தேறிய காசு உட்பாய்வு (முதலாம் வருட இறுதியில்) | 100,000 |

வருட இறுதி தேறிய காசு உட்பாய்வு தலா வருடமும் 10,000 ரூபாவினால் குறைகின்றது.

**கூற்று இரண்டு** : செயற்றிட்ட முகாமையாளர் - சூழல் ஆய்வு

செயற்றிட்டம் வெற்றியடையாது என வாதிடுகின்றார். அவர் தனது வாதத்திற்கு கீழ்வரும் தகவல்களை முன்மொழிகின்றார்.

வெளியக சூழல் காரணிகளால் செயற்றிட்டம் பாதிப்படைவதற்கான கூடுதலான சாத்தியப்படுகின்றது. செயற்றிட்டம் "PESTEL" காரணிகளால் பாதிக்கப்படலாம். இதனால்தான் வருடாந்தம் தேறிய காசுப் பாய்வு குறைகின்றது.

மேலுள்ள இரண்டு கூற்றுக்களையும் மொத்த இலாபச் சுட்டி பண மீளளிப்புக்காலம், தேறிய இலாபச் சுட்டி மற்றும் PESTEL அமைப்பு போன்றனவற்றைப் பாவித்து நியாயப்படுத்தும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

(கவனிக்குக : கழிவிட்டு காரணிக் கணிப்பீட்டிற்கு கணிப்பொறியைப் பாவிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) செயற்றிட்டத்தரம் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் முக்கிய எண்ணக்கருவாகும். செயற்றிட்டத் தரம் என்பது வாடிக்கையாளர் தேவைப்பாடுகளாக மாற்றப்படுகின்ற ஒரு அம்சமாகும்.

நீர் கீழ்வருவனவற்றைச் செய்யும்படி வேண்டப்படுகின்றீர் :

- செயற்றிட்டம் ஒன்றைப் பெயரிடுக. (01 புள்ளிகள்)
- தேவையான எல்லா எடுகோள்களையும் குறித்துக்காட்டுக. (01 புள்ளிகள்)
- 3* 3 தரவீட்டினைத் தயாரிக்குக (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**உமது செய்கைக்கு கீழ்வரும் ஆவணத்தைப் பாவிக்கும் படி வேண்டப்படுகின்றீர்.**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | முன்னேற்ற திசை | | | | | | | | | | | |
| 4 | | | | போட்டிப் பொருளின் திருப்தியை மதிப்பிடல் | | | வேறு அளவீடுகள் | | | | | |
| 5 | TR | | CIW | OP | CP1 | CP2 | PSR | IF | SP | OW | % | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | CR | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | | | |
| 13 | | | | | | | | | | | | |
| 14 | TP | | ○ | | □ | | △ | | | | | |
| 15 | % | | | | | | | | | | | |
| TB | OP | | கூடிய IR | | நடுத்தர IR | | குறைந்த IR | | | | | |
| | CP1 | | | | | | | | | | | |
| | CP2 | | 9 | | 3 | | 1 | | | | | |
| 19 | DT | | | | | | | | | | | |

| CIW | OP | CP1 | CP2 | PSR | IF | SP | OW | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| வாடிக்கையாளரின் முக்கிய நிறையளிப்பு | எமது பொருள் | போட்டியாளரின் பொருள் 1 | போட்டியாளரின் பொருள் 2 | அபிவிருத்தியின் மீதான திட்டமிட்ட நிரப்பு | முன்னேற்றக் காரணி | விற்பனை அம்சம் | மொத்த நிறையளிப்பு | % |

TP- தொழில்நுட்ப முன்னுரிமைகள்
TB- தொழில்நுட்ப ஒப்பீடு
DT- வடிவ இலக்கு

-098

03. அ) கீழ்வரும் நிலைமைகளைக் கருத்திற் கொள்க.

செயற்றிட்ட உயர் முகாமை மத்தியிலே பிணக்குக் காணப்படுகின்றது. வாடிக்கையாளர்கள் செயற்றிட்டத்தை நோக்கி நல்லெண்ணம் கொண்டுள்ளனர். செயற்றிட்டம் வளக்கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. விசேடமாக, நிதிப்பற்றாக்குறை ஒரு புறத்தில் முக்கியமாகக் காணப்படுகின்றது. மறுபுறம் மனிதவள நிபுணத்துவம் காணப்படுகின்றது. பல்லின மக்களிடையே செயற்றிட்டம் செய்யப்படவுள்ளது. எனவே, மதப் பிணக்குக் காணப்படுகின்றது. அரச குரோத நடவடிக்கைகள் கடுமையாகக் காணப்படுகின்றது. செயற்றிட்டத்திற்கு அதிக எண்ணிக்கையான போட்டியாளர்கள் காணப்படுகின்றனர். பொருளாதார வளர்ச்சி காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தைச் செய்கின்ற நிறுவனம் முழு தொழில் நுட்பத்தினைக் கொண்டுள்ளது. பிராந்தியத்தில் அதிகரித்த சனத்தொகை காணப்படுகின்றது.

நீங்கள் திருத்தக்கூடிய பலம், பலவீனம், அச்சுறுத்தல், வாய்ப்பினைச் செய்யும்படி கேட்கப்படுகின்றீர்கள்.


- கீழ்வரும் துணை ஆவணத்தைப் பாவிக்குக.

| பலங்கள் | பலவீனங்கள் | வாய்ப்புக்கள் | அச்சுறுத்தல்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

- ஊக்கப்படுத்தல் மற்றும் தடைக்காரணிகள் - வேலைத்தாள்

| ஊக்கப்படுத்தல் காரணிகள் | | தடைக்காரணிகள் | |
|---|---|---|---|
| பலங்கள் | வாய்ப்புக்கள் | பலவீனங்கள் | அச்சுறுத்தல்கள் |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

- ஊக்கப்படுத்தல் மற்றும் தடைக்காரணிகளை முன்னுரிமைப்படுத்துக.
- முக்கிய காரணிகளை அடையாளங்காண்க.
- அணி அங்கத்தவர்கள் மூலமான வாக்களிப்புச் செய்முறை



- முக்கியத்துவத்தின் பிரகாரம் அம்சம்குறித்தல்

| முக்கிய காரணி | முக்கியத்துவ வகை | அமிசங்கள் (Points) | நியாயங்கள் / காரணங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| | குறைந்த | 10 | | |
| | நடுத்தர | 20 | | |
| | கூடிய | 30 | | |
| அமிசங்கள் 10 இற்கும் 30 இற்குமிடையே இருக்க வேண்டும். | | | | |

- ஒவ்வொரு அங்கத்தவரினதும் அமிசங்களைக் கூட்டுக.
- நிகழ்வு வாய்ப்பினை அடையாளங்காண்க

| முக்கிய காரணி | நிகழ்வு வாய்ப்பு | அமிசங்கள் | நியாயங்கள் / காரணங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| | குறைந்த | 0.1 | | |
| | நடுத்தர | 0.5 | | |
| | கூடிய | 0.9 | | |
| அமிசங்கள் 0.1 இற்கும் 1.0 இற்குமிடையே இருக்க வேண்டும். | | | | |

- ஒரேயொரு நிகழ்வு வாய்ப்புத் தடவையால் மட்டும் M1 பெறுமதியைப் பெருக்குக.
- M2 ஐ M1 ஆல் பிரிக்குக.
- தீர்மானச் சட்டம்

| பெறுமதி | இறுதிப் பெறுமதி | முக்கிய வெற்றிக் காரணிகள் | செய்முறை |
|---|---|---|---|
| M2 / M1 | > 0.7 | மிக முக்கியமான காரணிகள் அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றன. | சரி |
| M2 / M1 | 0.3 இற்கும் 0.7 இற்கும் இடையில் | முக்கியமான காரணிகள் அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றன. | சரி |
| M2 / M1 | < 0.3 | மிக முக்கியமான காரணிகள் அடையாளப்படுத்தப் படவில்லை. | மேலுள்ள செய்முறையை மீளச் செய்க |

(07 புள்ளிகள்)

ஆ) நிறுவனச் செயற்றிட்டச் சொத்துக்கள் (நிறுவன கற்றலும் வளர்ச்சியும்) ஏற்கனவே உள்ள செயற்றிட்டங்களிலிருந்து பெற்றுக் கொண்ட சமநிலைப் புள்ளி அட்டையும் பெறுமதிச் சங்கிலி ஆய்வு மாதிரியும் தொடர்புகளைக் கொண்டுள்ளது. சார்பாக விவாதிக்குக.

(05 புள்ளிகள்)

இ) ஒலுவில் துறைமுக செயற்றிட்டம் ஒரு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு செயற்றிட்டமாகும். இது ஒரு கட்டுமானச் செயற்றிட்டம் தற்போது, தடைச்சுவர் ஒலுவிலின் வடக்கு தெற்கு கடலில் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கருங்கற்கள் இத்தடைச் சுவர்களை நிர்மாணிக்கப் பாவிக்கப்படுகின்றன.

பிரதம கட்டுமானப் பொறியியலாளர் கருங்கற்கள் நியமத்திற்கு அமைவாக இருக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

கீழ்வரும் அறிக்கையும் அதனது துணை ஆவணமும் கனிஷ்ட செயற்றிட்டக் கட்டுமானப் பொறியியலாளருக்கு சிரேஷ்ட கட்டுமானப் பொறியியலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

யாருக்கு : கனிஷ்ட செயற்றிட்ட கட்டுமானப் பொறியியலாளர்

யாரிடமிருந்து: சிரேஷ்ட செயற்றிட்ட கட்டுமானப் பொறியியலாளர்

திகதி : 01 ஜூன் 2009

விடயம் : நிர்மாணச் செய்முறைக் கட்டுப்பாடு

அறிமுகம் : நிர்மாணச் செய்முறை தொடர்பில் மாதிரிக் கருங்கற்கள் வாராந்தம் சேகரிக்கப்படுகின்றன. ஐந்து வாரங்கள் காணப்படுகின்றன. வேலை நாட்கள் ஐந்தாகும். மாதிரித் தொகுதியும் ஐந்தாகும்.

உள்ளடக்கம்: துணை ஆவணத்தைப் பார்க்குக.

முடிபு: நிர்மாணச் செயற்திட்டத்தின் கருங்கற்கள் நியமத்திற்கு அமைவாகக் காணப்படுகின்றதா அல்லது இல்லையா என எனக்கு அறிவிக்குக.

**துணை ஆவணம்**

கீழ்வரும் தரவுகள் (வாரம் 1 தொடக்கம் வாரம் 4) வரையிலான தகவல்கள் செயற்றிட்டக் கட்டுமானச் செய்முறைகளுக்காகத் தேவைப்படுகின்றது. கருங்கல்லின் நிறை 1000 கிலோகிராமில் தரப்படுகின்றது.

| வாரம் | மாதிரிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 9 | 10 |
| | 8 | 10 | 9 | 7 | 8 |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 7 | 8 |
| 2 | | | | | |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 6 | 7 |
| | 8 | 10 | 9 | 8 | 10 |
| | 8 | 10 | 9 | 5 | 7 |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| 3 | | | | | |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 7 | 8 |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 8 | 7 |
| | 8 | 10 | 8 | 7 | 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | | | | | |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 7 | 8 |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 5 | 7 |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| 5 | | | | | |
| | 6 | 7 | 8 | 10 | 9 |
| | 8 | 10 | 9 | 8 | 10 |
| | 8 | 10 | 9 | 7 | 8 |
| | 8 | 10 | 9 | 6 | 7 |
| | 8 | 10 | 9 | 8 | 10 |

1 முதல் 4 வரையிலான வாரங்கள் வரலாற்றுத் தரவுகளாகும். வாரம் 5 தீர்மானப் மேற்கொள்ளும் தரவுகளாகும்.

கனிஷ்ட செயற்றிட்ட நிர்மான பொறியியலாளர் இந்த அறிக்கைகளை ஆய்வு செய்தார். அவர் உம்மை செயற்றிட்ட செய்முறைத் தர பொறியியலாளராக கருதிக் கொள்க. அவர் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி உம்மை வேண்டுகின்றார். உமது அறிக்கை கீழ்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்.

இழிகட்டுப்பாட்டு மட்டம் (06 புள்ளிகள்)

தீர்மானம் மேற்கொள்ளலிற்கு முன்னரான கட்டுப்பாட்டு அட்டவணை.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. (அ) கீழ்வருவது ஒரு செயற்றிட்டத்தினுடையதாகும்.

| நடவடிக்கை | முன் நடவடிக்கை | சாதாரண நாட்கள் |
|---|---|---|
| A | ………………… | 9 |
| B | ………………… | 3 |
| C | A | 8 |
| D | A | 2 |
| E | A | 3 |
| F | C | 2 |
| G | C | 6 |
| H | C | 1 |
| J | B , D | 4 |
| K | F , J | 4 |
| L | E , H , G ,K | 2 |
| M | E , H | 3 |
| N | L , M | 4 |

இச்செயற்றிட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கான நாட்களைக் கணிக்குக. (06 புள்ளிகள்)

ஆ) கீழ்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

- பொறுப்பு ஒப்படைத்தல் தாயம்
- தரமும் தங்கத்தட்டிடலும்
- செயற்றிட்ட கொள்வனவுத்திட்டமிடல்
- தொழில்சார் அறவியல் கோவை

(08 புள்ளிகள்)

இ) கீழ்வருவன பாவா நிறுவனத்தின் செயற்றிட்ட ஆபத்து தாக்கத்தரவு.

| ஆபத்துக் காரணி | நிகழ்தகவு % | தாக்க % | | | |
|---|---|---|---|---|---|
| A | 90 | 10 | 20 | 40 | 80 |
| S | 70 | ,, | ,, | ,, | ,, |
| D | 50 | ,, | ,, | ,, | ,, |
| F | 30 | ,, | ,, | ,, | ,, |

மேலுள்ள அட்டவணையைப் பாவித்து கீழ்வருவனவற்றை செய்யும்படி நீர் வேண்டப்படுகின்றீர்.

- ஆபத்துத் தாக்கத் தாயத்தை தயாரிக்குக. (02 புள்ளிகள்)
- வேறுபட்ட ஆபத்து வகுதிகளை அடையாளங் காண்க. (01 புள்ளி)
- அவற்றிற்கான பதிலளிப்பு முறைகள் (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. அ) சமகால செயற்திட்ட முகாமைத்துவத்தில் அணிப் பிணக்குகள் வலியுறுத்தப்படுகின்றன.

- அணிப் பிணக்குகளுக்கான காரணிகள்
- அவற்றைத் தணிப்பதற்கான அணுகுமுறைகள்

உமது விளக்கத்திற்காக ஒரு மாதிரி செயற்திட்டத்தை சுட்டிக்காட்டி உமது விடையை நியாயப்படுத்துக.

(05 புள்ளிகள்)

ஆ) செயற்திட்ட வாழ்க்கை வட்டத்தையும் பொருள் வாழ்க்கை வட்டத்தையும் வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

இ) "முறைமைக் கோட்பாட்டுடன் செயற்திட்டம் தொடர்பினைக் கொண்டுள்ளது." சாதகமாக விவாதிக்குக.

(05 புள்ளிகள்)

ஈ) நீர் ஓர் அண்மையில் நியமிக்கப்பட்ட கனிஷ்ட செயற்திட்ட கிரய முகாமையாளர் என எண்ணிக்கொள்க. உமது சிரேஷ்ட செயற்.றிட்ட கிரய முகாமையாளர் கீழ்வரும் கலைச் சொற்களை உள்ளடக்கி ஒரு ஞாபகக் குறிப்பினை எழுதும்படி உம்மைக் கேட்டிருக்கின்றார்.

| PV | EV | AC | EAC | CPI |
|---|---|---|---|---|
| திட்டமிட்ட பெறுமதி | சம்பாதித்த பெறுமதி | உண்மைக் கிரயம் | முடிவில் பாதீடு | கிரயச் செயற்றிறன் சுட்டி |
| BAC | ETC | CV | SV | SPI |
| முடிவில் பாதீடு | முடிவிற்கு பாதீடு | கிரய வேறுபாடு | அட்டவணைப் படுத்தப்பட்ட வேறுபாடு | அட்டவணைப் படுத்தப்பட்ட செயற்றிறன் சுட்டி |

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*****